நமக்கு நாமே திட்டம் – 2008–2009 – மதுரை மாவட்டம், திருவேடகத்தில் செயல்பட்டுவரும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளிக்கு தார்சாலை அமைக்க சிறப்பு அனுமதி கோரிது – சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

---

**கடிதம்.(1டி) எண்.453, நாள் 17.7.2009.**

அனுப்புநர்
திரு க. அஷோக் வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர்,
சென்னை – 15

அய்யா,

பொருள்: நமக்கு நாமே திட்டம் – 2008–2009 – மதுரை மாவட்டம், திருவேடகத்தில் செயல்பட்டுவரும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளிக்கு தார்சாலை அமைக்க சிறப்பு அனுமதி கோரிது – சிறப்பு அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.87, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 5.6.2008.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.68932/08/என்இடிஎம்–1 , நாள் 6.7.2009.

* * * * *

மதுரை மாவட்டம், திருவேடகத்தில் செயல்பட்டுவரும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளிக்கு நமக்கு நாமே திட்டம் 2008–09ன் கீழ் தார்சாலை அமைப்பது குறித்த கருத்துரு வரப்பெற்றுள்ளதாக மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் தெரிவிதுள்ளதாகவும், மேலும் இப்பள்ளி 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் பள்ளி மற்றும் 6–ம் வகுப்பிலிருந்து 12– வகுப்பு வரை தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் பள்ளி என்றும் இப்பள்ளிக்கு 620மீ நீளம், 5.5 மீ அகலம் கொண்ட தார்சாலை அமைக்கும் பணிக்கு மூன்றில் ஒரு பங்கு தொகையை செலுத்த அப்பள்ளி தயாராக இருப்பதாகவும், மேலும் இப்பணியை அப்பள்ளியே எடுத்துச் செய்யவும் சிறப்பு அனுமதி கோரியுள்ளதாகவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும் கிராமப்புற பின்தங்கிய மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றிம் திருவேடகத்தில் செயல்பட்டுவரும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளிக்கு 620மீ நீளம், 5.5 மீ அகலத்திற்கு தார்சாலை அமைப்பதகு நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சிறப்பு அனுமதி வழங்குமாறும், அப்பணியை செயல்படுத்துவதற்கு சிறப்பு நிகழ்வாக அப்பள்ளி நிர்வாகதிற்கு அனுமதி வழங்கவும் கோரியுள்ளார்.

2) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கோரிக்கையை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. அதன்படி, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், திருவேடகத்தில் செயல்பட்டு வரும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளி 100 சதவீதம் அரசு நிதி உதவி பெற்று 6ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் பயிற்றுவிக்கும் பள்ளி என்பதாலும், கிராமப்புற பின்தங்கிய மாணவர்கள் நலனை கருத்தில் கொண்டும் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், திருவேடகத்தில் செயல்பட்டு வரும் விவேகானந்த மேல்நிலைப்பள்ளிக்கு 620 மீட்டர் நீளம் 5.5 மீட்டர் அகலத்திற்கு தார்ச் சாலை அமைக்க, 2008–09ம் ஆண்டு நமக்கு நாமே திட்ட வழிகாட்டு நெறிமுறைகளை தளர்த்தி சிறப்பினமாக எடுத்துச் செய்ய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சிறப்பு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இப்பணியினை மதுரை மாவட்டம், வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், திருவேடகத்தில் உள்ள விவேகானந்த மேல்நிலைப்பள்ளி எடுத்துச் செய்வதற்கு சிறப்பு நிகழ்வாக அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.